மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த

# நம்பிக்கை இல்லா தீர்மானம் படுதோல்வி

● **அனைத்தையும் அரசியலாக்குவதை மட்டுமே நோக்கமாக கொண்டு எதிர்க்கட்சிகள் செயல்படுகின்றன என்று பிரதமர் மோடி குற்றம்சாட்டினார். இண்டியா கூட்டணி எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்த பிறகு, மணிப்பூர் விவகாரம் குறித்து பேசினார்.**

● **புதுடெல்லி**

மக்களவையில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கை இல்லா தீர்மானம் தோல்வி அடைந்தது. இந்த தீர்மானம் மீதான விவாதத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "மணிப்பூரில் அமைதி திரும்பும். கலவரத்துக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று உறுதி அளித்தார்.

மணிப்பூர் கலவரம் தொடர்பாக மத்திய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணி சார்பில் மக்களவையில் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இதன் மீதான விவாதம் கடந்த 8-ம் தேதி தொடங்கியது.

3-வது நாளாக நேற்றும் விவாதம் தொடர்ந்தது. அப்போது மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் பேச்சை கண்டித்து காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், திமுக எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்து, பின்னர் அவைக்கு திரும்பினர்.

நம்பிக்கை இல்லா தீர்மானம் மீதான விவாதத்தின்போது மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி பிற்பகல் 2.48 மணிக்கு பேசத் தொடங்கினார். மக்களவையின் பிரதான எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது பிரதமர் அவையில் இருப்பது மரபு. இதன்படி பிரதமர் மோடி அவைக்கு வந்தார்.

ஆதிர் ரஞ்சன் சவுத்ரியின் சில கருத்துகளை அவைக் குறிப்பில் இருந்து நீக்க சபாநாயகர் ஓம் பிர்லா உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து இண்டியா கூட்டணி எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர். சிறிது நேரத்தில் அவர்கள் மீண்டும் அவைக்கு திரும்பினர். அப்போது மத்திய அமைச்சர் ஜோதிர் ஆதித்ய சிந்தியா பேசினார்.

நம்பிக்கை இல்லா தீர்மானத்தின் மீதான விவாதத்தின் இறுதியில் பிரதமர் நரேந்திர மோடி பதில் அளித்தார். அவர் கூறியதாவது:

மத்திய அரசு மீது மக்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர். அவர்கள் தங்கள் நம்பிக்கையை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றனர். இதற்காக மக்களுக்கு நன்றி. மக்களவையில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லா தீர்மானம் என்பது எங்களுக்கான சோதனை அல்ல. இது எதிர்க்கட்சிகளுக்கான சோதனை.

கடந்த மக்களவைத் தேர்தலின்போது எதிர்க்கட்சிகளுக்கு எதிராக மக்கள் வாக்களித்தனர். அந்த கட்சிகள் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. 2024 மக்களவை தேர்தலில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெறும். இதற்கு முந்தைய அனைத்து தேர்தல் வெற்றி சாதனைகளையும் நாங்கள் முறியடிப்போம்.

நாடாளுமன்றத்தில் கடந்த சில நாட்களில் ஜன் விஸ்வாஸ் மசோதா, மருத்துவ மசோதா, பல்மருத்துவ ஆணைய மசோதா உள்ளிட்ட பல்வேறு மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு உள்ளன. ஆனால் அவை நடவடிக்கைகளில் எதிர்க்கட்சிகளுக்கு நம்பிக்கை இல்லை. அனைத்தையும்



மக்களவையில் நேற்று நம்பிக்கை இல்லா தீர்மானம் மீதான விவாதத்துக்கு பதில் அளித்து பேசிய பிரதமர் நரேந்திர மோடி.

அரசியலாக்குவதை மட்டுமே எதிர்க்கட்சிகள் நோக்கமாக கொண்டு செயல்படுகின்றன. நாட்டு மக்கள் நலன் மீது எதிர்க்கட்சிகளுக்கு அக்கறை இல்லை. சொந்த கட்சிகள் மீது மட்டுமே அக்கறை செலுத்துகின்றன. மக்களவை தேர்தலுக்காக பல்வேறு ஊழல் கட்சிகள் ஓரணியில் சேர்ந்துள்ளன.

மத்திய அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டதை நல்ல சகுனமாக கருதுகிறோம். எங்களுக்கான போட்டி மைதானத்தை எதிர்க்கட்சிகளே தயார்செய்து கொடுத்துள்ளன. இந்த ஆட்டத்தில் ஆளும் கட்சி வரிசையில் இருந்து சதங்கள் குவிக்கப்பட்டு வருகின்றன. சிக்சர்கள் பறக்கிறது. எதிர்க்கட்சி வரிசையில் ஒரு பந்தைக்கூட வீச முடியவில்லை.

வரும் மக்களவைத் தேர்தலில் பாஜக கூட்டணி அமோக வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கும். இதேபோல, 2028-ம் ஆண்டிலும் எதிர்க்கட்சிகள் மத்திய அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லா தீர்மானத்தை கொண்டுவரும். அப்போது உலகின் 3-வது பெரிய பொருளாதாரமாக இந்தியா உயர்ந்து நிற்கும்.

**தீவிரவாதிகளை நம்பும் காங்கிரஸ்**

தீவிரவாதிகளுக்கு எதிராக ராணுவ தரப்பில் துல்லிய தாக்குதல் நடத்தப்பட்டது. ஆனால், காங்கிரஸ் இதை நம்பவில்லை. அந்த கட்சி தீவிரவாதிகள், பிரிவினைவாதிகள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளது. கரோனா பெருந்தொற்றின்போது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசிகளை மக்களுக்கு செலுத்தினோம். அப்போதும் கரோனா தடுப்பூசி குறித்து காங்கிரஸ் சந்தேகம் எழுப்பியது.

மணிப்பூர் கலவரத்துக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மணிப்பூர் மகள்களுக்கு ஆதரவாக ஒட்டுமொத்த நாடும் துணை நிற்கிறது. மணிப்பூர் பெண்களுக்கு இழைக்கப்பட்ட குற்றங்கள் மன்னிக்க முடியாதவை. தவறு செய்தவர்கள் நீதியின் முன்பு நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள். மணிப்பூர் விவகாரத்தில் மத்திய, மாநில அரசுகள் ஒன்றிணைந்து செயல்படும். அந்த மாநிலத்தில் மீண்டும் அமைதி திரும்பும்.

வடகிழக்கு மாநிலங்களின் பிரச்சினைகளுக்கு காங்கிரஸ் ஆட்சியே மூலகாரணம். அந்த கட்சியின் ஆட்சிக் காலத்தில் வடகிழக்கில் பல்வேறு தவறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்திரா காந்தி ஆட்சியில் மிசோரம் மக்கள் மீது விமானப் படை மூலம் குண்டுகள் வீசப்பட்டன. இதன் காரணமாக, இன்றுவரை மார்ச் 5-ம் தேதியை கறுப்பு தினமாக மிசோரம் மக்கள் அனுசரித்து வருகின்றனர். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் பேசவில்லை என்று குற்றம்சாட்டி இண்டியா கூட்டணியை சேர்ந்த எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர். அவர்கள் வெளிநடப்பு செய்த பிறகு, மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் பேசினார்.

இறுதியில் நம்பிக்கை இல்லா தீர்மானம் குறித்து குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் தீர்மானம் தோல்வி அடைந்தது. இதன்பிறகு, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தியதற்காக மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரியை சஸ்பெண்ட் செய்ய வகை செய்யும் தீர்மானத்தை அமைச்சர் பிரகலாத் ஜோஷி கொண்டு வந்தார். இது குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேறியது.

(மேலும் செய்தி, படங்கள் உள்ளே..)

## கச்சத்தீவை தாரை வார்த்தது யார்? திமுக மீது கடும் விமர்சனம்

நம்பிக்கை இல்லா தீர்மானம் மீதான விவாதத்துக்கு பதில் அளித்து பேசிய பிரதமர் மோடி, திமுகவை கடுமையாக விமர்சித்தார். அவர் பேசியதாவது:

கச்சத்தீவை மீட்க வேண்டும் என்று திமுக தரப்பில் இருந்து மத்திய அரசுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. "கச்சத்தீவை பிரதமர் நரேந்திர மோடி மீட்க வேண்டும்" என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் தொடர்ந்து வலியுறுத்துகிறார். கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்தது யார்? இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில்தான் அது இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது. இந்தியாவை உடைப்பதே காங்கிரஸின் வரலாறாக உள்ளது.

தமிழகத்தில் பாரதமாதாவுக்கு பூஜை செய்யப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. பாரத மாதா குறித்து சிலர் மோசமாக பேசியதால் ஒட்டுமொத்த இந்தியாவும் வருத்தம் அடைந்துள்ளது. அவர்களை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்.

காங்கிரஸ் கூட்டணியில் உள்ள திமுக தலைவர் ஒருவர், "தமிழ்நாடு இந்தியாவில் இல்லை" என்று பேசியுள்ளார். எதிர்க்கட்சி தலைவர்கள் தங்களை சுயபரிசோதனை செய்துகொள்வது அவசியம். ராஜாஜி, காமராஜர், எம்ஜிஆர், அப்துல் கலாமை கொடுத்தது தமிழ் மண் என்பதை மறந்துவிட வேண்டாம். இவ்வாறு பிரதமர் கூறினார்.




# பூமி, நிலவை துல்லியமாக படம் பிடித்த சந்திரயான்-3

● **இஸ்ரோ விஞ்ஞானிகள் மகிழ்ச்சி**

● **சென்னை**

சந்திரயான்-3 விண்கலம் எடுத்த பூமி மற்றும் நிலவின் 2 புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

நிலவில் தரையிறங்கி ஆராய்ச்சி செய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) தயாரித்த சந்திரயான்-3 விண்கலம், எல்விஎம்-3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த ஜூலை 14-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. பல்வேறு கட்ட பயணங்களுக்கு பின்னர், ஆக.5-ம் தேதி நிலவின் சுற்றுப்பாதைக்குள் சந்திரயான்-3 நுழைந்தது.



இஸ்ரோ வெளியிட்டுள்ள சந்திரயான்-3 விண்கலம் எடுத்த பூமி மற்றும் நிலவின் படங்கள்.


**நிலவு வட்ட சுற்றுப்பாதையில்**

தற்போது சுற்றுப்பாதை உயரத்தை சுருக்கி, நிலவில் விண்கலத்தை மெதுவாக தரையிறக்குவதற்கான பணிகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். தற்போது குறைந்தபட்சம் 174 கி.மீ. தூரமும், அதிகபட்சம் 1,437 கி.மீ. தூரமும் கொண்ட நிலவு வட்ட சுற்றுப்பாதையில் சந்திரயான் விண்கலம் வலம்வருகிறது. இந்நிலையில், சந்திரயான்-3 விண்கலம் எடுத்த பூமி மற்றும் நிலவின் 2 புகைப்படங்களை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

அதாவது, நிலவில் தரையிறங்கக்கூடிய லேண்டரில் உள்ள எல்எச்விசி எனும் கிடைமட்ட கேமரா மூலம் நிலவின் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இப்படங்கள் துல்லியமாக இருப்பதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் உற்சாகத்துடன் கூறினர்.

அதில் 120 கி.மீ. விட்டம் கொண்ட பிதாகரஸ் பள்ளம், எரிமலைகளால் ஏற்பட்ட ஓசியானஸ் புரோசெல்லாரம், அரிஸ்டார்கஸ் பள்ளம், ராமன் பள்ளத்தாக்கு என நிலவின் மேற்பரப்பை தெளிவாக காணமுடிகிறது.

இந்த படம் ஆக.6-ம் தேதி நிலவில் இருந்து 18,000 முதல் 10,000 கிமீட்டர் உயரத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதேபோல, இஸ்ரோ வெளியிட்ட பூமியின் படம், லேண்டரின் முன்பகுதியில் உள்ள இமேஜிங் கேமரா மூலம் ஜூலை 14-ம் தேதி எடுக்கப்பட்டதாகும். அடுத்தகட்டமாக சந்திரயான் சுற்றுப்பாதை உயரம் படிப்படியாக மாற்றி அமைக்கப்பட உள்ளது. திட்டமிட்டபடி ஆக.23-ம் தேதி நிலவின் தென்துருவத்தில் மெதுவாக விண்கலம் தரையிறக்கப்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.




# தரவுப் பாதுகாப்பு மசோதா யாரைப் பாதுகாக்கிறது?



ஜெயராம் வெங்கடேசன்
ஒருங்கிணைப்பாளர் - அறப்போர் இயக்கம்
தொடர்புக்கு: contact@arappor.org

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரில் இரண்டு அவைகளிலும் டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதா 2023 (Digital Personal Data Protection Bill 2023) நிறைவேற்றப்பட்டுவிட்டது. இந்த மசோதா குறித்த பல முக்கியப் பிரச்சினைகள் எழுந்துள்ளன. தனிநபர் தகவல்களைச் சேகரிப்பவர்கள், அந்தத் தகவல்களை எப்படிக் கையாள வேண்டும் என்பதற்காகவும் தனிநபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் இந்த சட்டம் கொண்டுவரப்படுவதாகச் சொல்லப் படுகிறது. ஆனால், இந்தச் சட்டத்தின் குறிக்கோளுக்கும் அதன் சட்ட வடிவத்துக்கும் மிகப்பெரிய இடைவெளி உள்ளதாக நாடு முழுக்க பல வல்லுநர்கள் குரல் எழுப்பியுள்ளனர்.

இந்தச் சட்டமானது மக்களிடம் இருந்து தகவல்களைப் பெறுவதற்கு உள்ள தடைகளிலிருந்து அரசு விலக்கு பெற்றுக்கொள்ள வழிவகுக்கிறது. அத்துடன், அரசிடம் இருந்து மக்கள் தகவல் பெறுவதற்கான உரிமையை வழங்கியிருக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மிகப்பெரிய அளவில் வலுவிழக்கச் செய்யும் திருத்தமும் இந்த டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதாவின் ஓர் அங்கமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

**ஊழல் எதிர்ப்பில் பின்னடைவு:** தனிநபர்களின் தனியுரிமைத் (Right to Privacy) தகவல்களுக்கும் தனிநபர் பொதுத் தகவல்களுக்கும் (Right to personal information in public interest) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் ஏற்கெனவே நல்ல சமநிலை உள்ளது. இன்றைய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் பிரிவு 8(1)(j)-இல் பொது வேலைக்கும் பொது நலனுக்கும் முற்றிலும் சம்பந்தம் இல்லாத தனிநபரின் தகவல்களாக இருந்தாலோ, ஒருவரது தனிப்பட்ட வாழ்க்கையின் அந்தரங்க விவகாரத்தில் தலையிடுவதுபோல் இருந்தாலோ தகவல்கள் தரத் தேவையில்லை என்று விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதாவது, அரசிடம் உள்ள தனிநபர் சார்ந்த தகவல் ஒன்றை அளிப்பது, தனிநபர் உரிமையை மீறாத வண்ணம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் ஏற்கெனவே வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், தனிநபர் சார்ந்த தகவல் என்றாலே தரத் தேவையில்லை என்று இந்தச் சட்டப் பிரிவில் தற்போது திருத்தம் மேற்கொண்டிருப்பது ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் மிகப்பெரிய பின்னடைவை உருவாக்கும்.

இந்தத் திருத்தம் பல முக்கியக் கேள்விகளை எழுப்புகிறது. இன்று பல பெரிய தனியார் நிறுவனங்கள்/நபர்கள் பல வங்கிகளில் லட்சக்கணக்கான கோடி ரூபாய் வாராக் கடனை ஏமாற்றியிருப்பது நமக்குத் தெரியும். வங்கியில் உள்ளது மக்கள் பணம்தானே? பொது நலனில் யார் ஏமாற்றியது என மக்களுக்குத் தெரிய வேண்டாமா? மக்கள் வரிப் பணத்தில்தான் 'வீடு கட்டும் திட்டம்' நடைபெறுகிறது; 'நூறு நாள் வேலைத் திட்டம்' நடைபெறுகிறது. சரியான பயனாளிகளுக்குத்தான் இந்தத் திட்டம் போய்ச் சேர்கிறதா என்பதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? தங்களுடைய வரிப் பணத்தில் சம்பளம் பெறும் அரசு ஊழியர் ஒருவரின் சொத்து விவரம், வருகைப் பதிவேடுகளைத் தெரிந்துகொள்ளும் உரிமை மக்களுக்கு இல்லையா? இந்த வெளிப்படைத்தன்மை இருந்தால்தானே ஊழல் குறையும்; நிர்வாகச் சீர்கேடு குறையும்? இப்படித் தனிநபர் சார்ந்த அனைத்துத் தகவல்களையும் தர முடியாது என்பதன் மூலமாக, அரசின் வெளிப்படைத்தன்மை மிகப்பெரிய அளவில் குறைந்து, ஊழல் மேலும் அதிகரிக்கும். ஊழல், ஊழல்வாதிகள் குறித்த தகவல்களை மக்கள் பெற முடியாத நிலை ஏற்படும். இந்தச் சட்டத் திருத்தத்துக்கும் இச்சட்டத்தின் குறிக்கோளான தனிநபர் உரிமைப் பாதுகாப்புக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

**பறிபோகும் உரிமை:** தனிநபர் சார்ந்தது என்றாலும் நாடாளுமன்றத்துக்கும் சட்டமன்றத்துக்கும் கொடுக்கக்கூடிய தகவல்களை மக்களுக்கும் கொடுத்தாக வேண்டும் என்கிற பிரிவும் சட்டத் திருத்தம் மூலம் நீக்கப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் தெரிவிக்கப்படும் தகவல்கள் சாதாரண மனிதருக்கும் தெரிய வேண்டும் என்பதே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் முக்கிய அம்சமாகும். 2005க்கு முன்பு வரை நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே குறிப்பிட்ட தகவலைப் பெற முடியும் என்கிற நிலை இருந்தது. ஆனால், இந்தச் சட்டம் வந்த பிறகு அந்த அதிகாரம் ஒவ்வொரு சாமானிய மனிதரின் கைக்கும் வந்தது.

இந்த சாராம்சம் விதிவிலக்கின் கடைசிப் பிரிவான 8(1)(j)க்குப் பிறகு உள்ள ஒன்று. அதாவது, அனைத்து விதிவிலக்குகளுக்கும் பொதுவானது என்றுதான் தகவல் அறியும் உரிமைச் சட்ட வரைவை உருவாக்கிய அருணா ராய் போன்றவர்கள் கூறுகின்றனர். எந்தத் தகவல் விதிவிலக்கின் கீழ் வந்தாலும், அது நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தரக்கூடிய தகவலாயின் அது மக்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்பதே இதன் அர்த்தம். ஆனால், இதை 8(1)(j)-இன் அங்கம் மட்டுமே என்று தவறாகக் கருதி, 8(1)(j) பிரிவுத் திருத்தத்தின் அங்கமாக இதையும் சேர்த்து நீக்குகிறோம் என அரசு தெரிவித்திருக்கிறது. தற்போது இந்தச் சட்டத்திருத்தத்தின் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெறக்கூடிய தகவல்களைச் சாமானிய மனிதர் பெற முடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

**தன்னாட்சியற்ற ஆணையம்:** டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்பு மசோதா 2023இன் வேறு சில அம்சங்களும் கவலை அளிக்கக்கூடியதாக உள்ளன. தனிநபர் ஒவ்வொருவரிடமும் இணையதளம் வழியாகப் பெறப்படும் தகவல்கள் அனைத்துக்கும் இனி அவர்களது ஒப்புதலைப் பெற்று, எதற்காகப் பெறப்படுகிறதோ அதைத் தெரிவித்து, அதற்கு மட்டும்தான் அந்தத் தகவலை நிறுவனம் பயன்படுத்த வேண்டும்; வேறு விஷயங்களுக்குப் பயன்படுத்தப்பட்டால் எந்த ஒரு தனிநபரும் தரவுப் பாதுகாப்பு ஆணையத்திடம் புகார் கொடுக்கலாம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், இதில் கவலை அளிக்கக்கூடியது இந்த ஆணையம் தன்னாட்சி உடையது அல்ல. இதில் நியமிக்கப்படுபவர்களை மத்திய அரசுதான் முடிவு செய்யும்.

பல்லாயிரக்கணக்கான புகார்கள் வந்தால் எந்தப் புகார்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்? இந்த முழு அதிகாரத்தையும் மத்திய அரசு நியமிக்கும் அதிகாரிகளின் கைகளில் குவிப்பதன் மூலம், தனக்குப் பிடிக்காதவர்கள், தன்னை விமர்சிப்பவர்கள் மீது மட்டும் அரசு நடத்தும் தாக்குதலுக்கு மேலும் வழிவகுக்கும் என்பது ஒரு முக்கியக் கவலை. இந்த ஆணையம் ரூ.250 கோடி வரை விதிமீறும் நிறுவனங்கள் மீது அபராதமாக விதிக்க முடியும். ஆனால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த நிவாரணமும் குறிப்பிடப்படவில்லை. மேலும் அரசு நிறுவனங்கள் அனைத்துக்கும் இந்தச் சட்டத்திலிருந்து விலக்கு பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதாவது, ஆதார் விவரங்கள் திருட்டுப் போனால் அரசைக் கேள்வி கேட்க முடியாது.

ஒரு சட்டம் சரியாகச் செயல்பட மக்கள் கையில் அதிகாரத்தைக் கொண்டுசேர்க்க வேண்டும். ஆனால், இந்த மசோதா அரசின் அதிகாரக் குவிப்புக்கு வழிவகுக்கிறது. ஏற்கெனவே, மக்கள் கையில் அதிகாரமாக உள்ள தகவல் அறியும் உரிமையைப் பறிக்கும் வகையில் இது அமைந்துள்ளது. இந்த மசோதா சட்டமாகிவிட்டால், வெளிப்படைத்தன்மையில் இந்தியா கண்ட முன்னேற்றம் 20 ஆண்டுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடும். ●






கு.கணேசன்
பொதுநல மருத்துவர்
தொடர்புக்கு: gganesn95@gmail.com

கடந்த மாதம் ஊடகங்களில் இடம்பெற்ற இரண்டு செய்திகள் கவனத்துக்கு உரியவை: முதலாவது, வட மாநிலங்களில் வரலாறு காணாத கனமழை பெய்து பல மாவட்டங்கள் வெள்ளக்காடான செய்தி. அடுத்தது, மத்திய சுகாதார-குடும்பநல அமைச்சகம், ஜூலை 23 அன்று மக்களவையில் வெளியிட்ட 'வெப்ப அலைகளால் ஏற்பட்ட இறப்புகள்' குறித்த அறிக்கை. 2023 ஜூன் 30 நிலவரப்படி, இந்த ஆண்டு வெப்ப அலைகளால், 14 மாநிலங்களில் குறைந்தது 264 பேர் இறந்துள்ளனர் என்கிறது அந்த அறிக்கை. இரண்டுமே காலநிலை மாற்றத்தால் தூண்டப்பட்ட ஆபத்துகள் என்பதுதான் இங்கு கவனிக்க வேண்டிய விஷயம்.

புவி வெப்பமாதல் குறித்தும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் உள்ள பிரச்சினைகளைப் பற்றியும் ஊடகங்களில் அடிக்கடி பேசப்படுகிறது. புவிவெப்பம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பதால் பனிப்பாறைகள் உருகும்; கடல் மட்டம் உயரும்; நகரங்கள் மூழ்கும்; பேரிடர் பேரழிவு ஏற்படும் எனப் பூமிப் பந்துக்குப் பலதரப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. இந்த வரிசையில் பூமியில் வாழும் மனிதர்களுக்கு என்னென்ன உடல்நலப் பாதிப்புகள் ஏற்படும் என்பதை நாம் முழுமையாக உணர்ந்திருக்கிறோமா?

**மாசுபடும் வளிமண்டலம்:** கரியமில வாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன் போன்ற பசுங்குடில் வாயுக்கள் வளிமண்டலத்தில் அளவுக்கு அதிகமாகச் சேரும்போது பூமி சூடாகிறது. இன்றைய மக்கள்தொகைப் பெருக்கம், நவீனத் தொழில்முறைகள், நிலக்கரி, பெட்ரோல், மரபு எரிசக்தி வாகனங்கள், காடுகள் அழிக்கப்படுவது, நவீன வாழ்க்கைமுறை எனப் பலவும் பசுங்குடில் வாயுக்களின் அளவற்ற வெளியீட்டுக்குக் காரணமாகின்றன. இவற்றில் கரியமில வாயுதான் வளிமண்டலத்தில் அதிக அளவில் நிறைந்திருக்கிறது. இப்படிப் பசுங்குடில் வாயுக்களின் அடர்த்தி அதிகரிக்க அதிகரிக்க பூமியின் வெப்பமும் அதிகரித்துக்கொண்டே போகிறது. அப்போது பூமியில் வாழும் உயிரினங்களின் மீது அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**அதிகரிக்கும் இதயநோய்கள்:** வளிமண்டலத்தில் 2.5 மைக்ரான் அளவுக்கும் குறைவாக உள்ள மிக நுண்தூசி (PM2.5) அதிகமானால், அது மனித ஆரோக்கியத்துக்கு ஆபத்து தரும் என்பது உறுதிப்படுத்தப்பட்ட உண்மை. உலக சுகாதார நிறுவனத்தின் 2022ஆம் ஆண்டு அறிக்கையின்படி, இந்தியாவில் இந்த மாதிரியான நுண்தூசி வரையறுக்கப்பட்ட அளவைவிட 15 மடங்கு அதிகமாக இருப்பது தெரியவந்துள்ளது. இதனால் ஆஸ்துமா, சுவாசத்தடை (COPD) உள்ளிட்ட பிரச்சினைகள் இரட்டிப்பாயிருக்கின்றன. இது ஒருபுறமிருக்க, இந்த நுண்தூசி இதய நோய், பக்கவாதம் உள்ளிட்ட ரத்தக்குழாய் நோய்களையும் அதிகப்படுத்தி இருக்கின்றது. இந்தியாவில் கடந்த ஆண்டில் இந்த இரண்டு நோய்களால் இறந்தவர்களில் 39% பேரின் உயிரிழப்புக்குக் காற்று மாசுதான் முக்கியக் காரணமாக இருந்திருக்கிறது.

**சந்ததிகளுக்கும் ஆபத்து:** காலநிலை மாற்றத்தால் பெருவெள்ளமும் புயல் போன்ற பேரிடர்களும் ஏற்படும்போது தெருக்களில் தண்ணீர் தேங்கும். அதனால் கொசுக்களின் இனப்பெருக்கம் அதிகரித்து டெங்கு, மலேரியா, சிக்குன்குனியா போன்ற தொற்றுநோய்கள் இன்னும் பல மடங்கு அதிகமாகப் பரவும். மேலும், இந்தத் தொற்றுகள் கர்ப்பிணிகளைப் பாதிக்குமானால், அவர்களுக்கு ரத்தசோகை ஏற்படும்; குறைப்பிரசவத்தில் குழந்தை பிறக்கவும் எடை குறைவாகப் பிறக்கவும் வாய்ப்பு உண்டு. இன்னும் சொல்லப்போனால், பிறவிக்குறை நோய்களுடனும் குழந்தைகள் பிறக்கலாம். ஆகவே, காலநிலை மாற்றத்தால் நம் சந்ததிகளின் ஆரோக்கியத்துக்கும் ஆபத்து காத்திருக்கிறது என எச்சரிக்கின்றனர் சூழலியலாளர்கள்.

**ஆபத்தாகும் வெப்ப அலைகள்:** 2023 ஏப்ரலில் உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட மற்றொரு அறிக்கையில், இந்தியாவில் 90% இடங்கள் வெப்ப அலை பாதிப்புகளிலிருந்து தப்பிக்க முடியாது என்கிறது. இதை உறுதிப்படுத்தும் விதமாக இருக்கிறது பிரபல மருத்துவ ஆய்விதழான 'லான்செட்'டில் வெளிவந்துள்ள ஒரு புள்ளிவிவரம். இந்தியாவில் 2000ஆம் ஆண்டுக்குப் பிறகு, வெப்ப அலைகளால் இறந்தவர்களின் எண்ணிக்கை 55% அதிகரித்திருக்கிறது என்கிறது அந்தப் புள்ளிவிவரம். காரணம், வெப்ப அலைகளின் பாதிப்பைக் குறைக்க மக்கள் பெரும்பாலும் தண்ணீரில்தான் அதிக நேரம் செலவிடுவார்கள். அப்போது நீரினால் பரவும் நோய்கள் அதிகரிக்கும்.

**தாக்கும் வழிகள்:** கடந்த காலத்தில் வெளிவந்துள்ள காலநிலை மாற்றம் சார்ந்து ஆரோக்கியம் இழந்தவர்கள் குறித்த தரவுகளை இந்தியச் சுற்றுச்சூழல்-சுகாதார அறிவியலாளர்கள் மதிப்பாய்வு செய்து ஒரு வரைபடத்தைத் தயாரித்தனர். அதில் மனிதர்களைத் தாக்கும் 375 வகை நோய்களில், 218 வகை நோய்கள் காலநிலை மாற்றத்தால் அதிகரிக்கும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. வழக்கத்தில், காலநிலை மாற்றம் நம் ஆரோக்கியத்தை இரண்டு வழிகளில் பாதிக்கிறது. முதலாவதாக, பேரிடரும் பேரழிவும் ஏற்படும்போது, அவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரே இடத்தில் நெருக்கமான சூழலில் வசிக்க வேண்டிவரும். அப்போது பொதுச் சுகாதாரம் அங்கு குறையும். சுத்தமான குடிநீருக்குத் தட்டுப்பாடு வரும். அவற்றின் விளைவால், எளிதில் நோய்க்கிருமிகளின் தாக்குதலுக்கு உள்ளாவார்கள். இரண்டாவதாக, ஊட்டச்சத்துள்ள உணவு அவர்களுக்குப் போதுமான அளவு கிடைப்பதிலும் சிரமம் ஏற்படும். அப்போது ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்படும். இதனால், நோய்க்கிருமிகளை எதிர்த்துப் போராடும் ஆற்றலை அவர்கள் இழந்துவிடுவார்கள். குறிப்பாக, குழந்தைகளுக்கு இது அதிக ஆபத்தை ஏற்படுத்தும். இந்த ஆபத்துகளை எல்லாம் எதிர்கொள்ள நாம் தயாராகிவிட்டோமா?

**செயல்திறனுள்ள திட்டங்கள் தேவை:** காலநிலை மாற்றம் சார்ந்து மக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதைத் தடுக்க 2018இல் தேசிய அளவில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. அதன்படி, காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை அனைத்துத் தரப்பினரிடமும் ஏற்படுத்த வேண்டும்; நாட்டில் மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்த வேண்டும். பொதுச் சுகாதாரம் மேம்படுத்தப்பட வேண்டும். ஆனால், சமீபத்தில் கனமழையும் வெள்ளமும் வட மாநிலங்களைப் புரட்டிப்போட்டபோது அந்த மாநிலங்கள் அவற்றை எதிர்கொண்ட விதம், அரசு இயந்திரங்களின் இயலாமையைக் காட்டியது. டெல்லியில் சில மருத்துவமனைகளுக்கு உள்ளே வெள்ளம் புகுந்ததால், நோயாளிகள் வெளியேற்றப்பட்ட அவலத்தையும் காண நேர்ந்தது. பல குடும்பங்கள் மேம்பாலங்களுக்கு அடியில் தங்கியதை ஊடகங்கள் காட்சிப்படுத்தின. அதனால், மத்திய அரசின் 'காலநிலை மாற்றம் – மனித ஆரோக்கியத்துக்கான தேசிய செயல் திட்டம்' (India's National Action Plan for Climate Change and Human Health) முழுவீச்சில் செயல்படுத்தப்படவில்லை என்பது பொதுவெளிக்குத் தெரியவந்தது.

காலநிலை மாற்றத்தின் தீவிரம் இந்தியாவில் வெளிப்படத் தொடங்கியிருக்கும் இந்தச் சூழலில், பழைய திட்டங்களின் போதாமைகளைக் கண்டறிந்து, புதிய திட்டங்களை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயம். உதாரணமாக, கரிம உமிழ்வைச் சமாளிக்க மரங்கள் நடுவது முக்கியம்தான். ஆனால், காடழிப்பைத் தடுக்க வேண்டியது அதைவிட முக்கியம். அதுபோல், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் ஆரோக்கியப் பாதிப்புகளை எதிர்கொள்ளச் சிறந்த திட்டங்கள் அவசியம்தான். அதேவேளை, அந்தப் பாதிப்புகளை மட்டுப்படுத்தும் விதமான செயல்திறனுள்ள முன் தடுப்புத் திட்டங்கள் தீட்டப்பட வேண்டியது அதைவிட முக்கியம். அதற்கு, நாட்டில் பேரிடர், பேரழிவு ஏற்படும் களங்கள் எவையெவை, அதிகம் பாதிக்கப்படுபவர்கள் யார், எந்த மாதிரியான ஆரோக்கியப் பாதிப்புகள் ஏற்படும், எத்தனை பேருக்கு ஏற்படும் என்பது போன்ற தரவுகளைச் சேகரிக்க வேண்டும்.

பிறகு, தேவையான மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் என்னென்ன, முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது சிகிச்சைக்கா நோய்த் தடுப்புக்கா, நாள்பட்ட பாதுகாப்பு அம்சங்கள் எவையெவை என்பன போன்ற முக்கிய விஷயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இது குறித்து மத்திய – மாநில அரசுகள், சூழலியலாளர்கள், சுகாதாரத் துறையினர், தன்னார்வ அமைப்பினர், கொடையாளர்கள் எனப் பலரும் கூடி விவாதிக்க வேண்டும்; காலநிலை மாற்றத்தின் தீவிர விளைவுகளைத் தடுக்க அனைத்துத் தரப்பினருக்கும் தெளிவான வழிகாட்டுதல்களைத் தர வேண்டும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில்

# ரூ.515 கோடியில் கோத்ரெஜ் நிறுவனத்தின் புதிய ஆலை

## ● முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம்

● சென்னை

கோத்ரெஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனம், செங்கல்பட்டு மாவட்டத்தில், ரூ.515 கோடி முதலீட்டில் புதிய உற்பத்தி ஆலையை நிறுவ முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

இந்தியாவிலேயே 2-வது பெரிய பொருளாதார மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. தானியங்கி வாகனங்கள், ஜவுளி, காலணி மற்றும் தோல் பொருட்கள், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வான்வெளி மற்றும் பாதுகாப்பு என பல்வேறு வகையான தொழில்களை நிறுவிட ஊக்கமளிப்பதன் மூலம், முதலீடுகள் மேற்கொள்வதற்கு உகந்த மாநிலமாக தமிழகம் தன்னை தொடர்ந்து நிலைநிறுத்தி வருகிறது.

தமிழகத்தின் பொருளாதாரத்தை 2030-ம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்திட வேண்டும் என்று முதல்வர் இலக்கு நிர்ணயித்துள்ளார். இந்த இலக்கை விரைவில் அடைய, அதிக முதலீடுகளை ஈர்த்து, தமிழக இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் பொருட்டு, அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

### 446 பேருக்கு வேலைவாய்ப்பு

கோத்ரெஜ் குழுமத்தின் ஒரு அங்கமான கோத்ரெஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனம், இந்தியாவில் 33 இடங்களில் தனது உற்பத்தி அலகுகளை நிறுவியுள்ளது. தமிழகத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மறைமலைநகரில் ஒரு உற்பத்தி மையத்தை நிறுவியுள்ள இந்நிறுவனம், மேம்பட்ட உற்பத்தி மையத்தின் ஒரு சிறப்புமிக்க நிறுவனம் என்பதை இலக்காகக் கொண்டு ஒரு புதிய அதிநவீன உற்பத்தி ஆலையை நிறுவத் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, செங்கல்பட்டு மாவட்டத்தில், ரூ.515 கோடி முதலீடு மற்றும் 446 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சோப்புகள், முக அழகு க்ரீம்கள், தலைமுடி பராமரிப்பு சாதனங்கள் மற்றும் கொசு ஒழிப்பான் போன்றவற்றுக்கு ஒரு உற்பத்தி மையத்தை நிறுவ உள்ளது.

### 50 சதவீதம் பெண்கள்

இந்தத் திட்டத்தில், 50 சதவீதம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க உள்ளதாகவும். மேலும், திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்க உள்ளதாகவும் இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தை நிறுவ, முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தமிழக அரசு மற்றும் கோத்ரெஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனம் இடையே நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்நிகழ்ச்சியில், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச்செயலர் சிவ்தாஸ் மீனா, தொழில்துறை செயலர் ச.கிருஷ்ணன், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, கோத்ரெஜ் கன்ஸ்யூமர் ப்ராடக்ட்ஸ் நிறுவனத்தின் செயல் தலைவர் நிசாபா கோத்ரெஜ், மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் சுதிர் சீதாபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

© KSL Media Ltd

### ஜன. 7, 8-ல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு

# இலச்சினையை வெளியிட்டார் முதல்வர்

## பல லட்சம் கோடிக்கு முதலீடு வரும் என அறிவிப்பு

**சென்னை**

சென்னையில் அடுத்தாண்டு ஜன. 7, 8-ம் தேதிகளில் நடைபெறும் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பல லட்சம் கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்படும் என்று மாநாட்டுக்கான இலச்சினை வெளியீட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முதல்வர் பேசியதாவது:

உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 ஜன. 7, 8 ஆகிய தேதிகளில் சென்னையில் நடத்தப்பட உள்ளது. இந்த மாநாட்டின் மூலம், பல லட்சம் கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்படும். மாநிலத்தின் இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு வேலைவாய்ப்பு பன்மடங்கு அதிகரிக்கும். நமது மாநிலத்தின் பொருளாதாரமும் பெருமளவு வளர்ச்சியடையும்.



↑ **உலக முதலீட்டாளர் மாநாடு இலட்சினை**

இங்கே வந்திருக்கக்கூடிய தொழில்துறை கூட்டமைப்பினர் அனைவரும் தமிழகத்தின் பிராண்ட் அம்பாசிடர்களாக மாறி, முன்னணி நிறுவனங்களை தமிழகத்தில் முதலீடு செய்ய ஊக்குவிக்க வேண்டும்.

தொழில் நிறுவனங்களுக்கான நிலங்கள் கையிருப்பு அடிப்படையில், தமிழகம் முதலிடத்தில் உள்ளது. பன்னாட்டு நிறுவனங்கள் எதிர்ப்பார்புகளை பூர்த்தி செய்யும் விதமாக நம்பகமான உயர்தர குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் சூழலை தமிழகம் கொண்டுள்ளது. உங்கள் தொழில் வளர்ச்சிக்கான சிறந்த இடம் தமிழகம்தான்.

இவ்வாறு முதல்வர் பேசினார். நி

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச்செயலர் சிவ்தாஸ் மீனா, தொழில்துறை செயலர் ச.கிருஷ்ணன், சிறப்பு பணி அலுவலர் அருண் ராய், வழிகாட்டி நிறுவன தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



புதுக்கோட்டை அருகே பொற்பனைக்கோட்டையில் நடைபெற்று வரும் அகழாய்வில் தென்பட்டுள்ள வட்டச் சுவர்.

### புதுக்கோட்டை அருகே

# பொற்பனைக்கோட்டை அகழாய்வில் காணப்பட்ட வட்டச் சுவர்கள்

**புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டையில் உள்ள வட்டக் கோட்டையின் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வில் வட்டச் சுவர்கள் தென்பட்டுள்ளது.

பொற்பனைக்கோட்டையில் சங்க காலத்தைச் சேர்ந்த வட்டக் கோட்டை, கொத்தளம் இருந்ததற்கான கட்டுமானம் உள்ளது. இதே போல, கோட்டையின் உள் மற்றும் வெளிப்பகுதிகளில் அகழி உள்ளது. இங்கு, தொல்லியல் துறை சார்பில் கடந்த மே மாதம் தொடங்கி அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தலா 15 அடி நீள, அகலத்தில் 13 இடங்களில் அகழாய்வுப் பணி நடைபெற்று வருகிறது. இதுவரை, தங்க மூக்குத்தி, பல்வேறு விதமான பானை ஓடுகள், கண்ணாடி வளையல்கள் உள்ளிட்ட பல்வேறு விதமான தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், அகழாய்வுப் பணி நடைபெற்று வரும் ஒரு குழியில் சுமார் ஒரு அடி ஆழத்தில் வட்ட வடிவிலான சுவர் தென்பட்டுள்ளது. அடுத்தடுத்து 4 வட்டச் சுவர்கள் காணப்படுகின்றன. இவை எதற்காக கட்டப்பட்டிருக்கலாம் என்பதை உடனடியாக கண்டுபிடிக்க முடியவில்லை.

தொடர்ந்து, அகழாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டால்தான் எதற்காக கட்டப்பட்ட சுவர்கள் என்பது தெரியவரும் என தொல்லியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பெரும்பாலான குழிகளில் செங்கல் கட்டுமானம் தென்பட்டாலும், அவை ஒழுங்கற்று காணப்படுகின்றன. எனினும், ஒரு குழியில் மட்டும் முறையான தோற்றத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.